<u>**Sub Court, Eraniel**</u>

O.S. No.47/2022
Date: 25.02.2026.
CW1 - திரு.சஜின்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் இறுதியாக வழக்குப் பட்டிகை சொத்தை 17.01.2023 அன்று பார்வையிட்டேன். எனது ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை 14.07.2023 அன்று தாக்கல் செய்தேன். வழக்குப்பட்டிகை சொத்தை நான் பார்வையிட்டபோது, வாதியின் ஆவணங்களை நான் பார்வையிட்டேன். பிரதிவாதியின் ஆவணங்களை நான் பார்வையிடவில்லை என்றால், பிரதிவாதியின் ஆவணங்கள் எனக்கு கிடைக்கவில்லை. பிரதிவாதிக்கு நான் முறையாக அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால், பிரதிவாதி Exparte ஆனதால் RPAD ல் அறிவிப்பு அனுப்பி வைத்தேன். அவர் ஊரில் இல்லாததால், அவருக்கு தகவல் தெரியாது என்றால், சரிதான். ஆனால் பிரதிவாதியின் சகோதரியும், பிரதிவாதியின் தாயாரும், நான் வழக்கு பட்டிகை சொத்தை பார்வையிட்ட போது அங்கு இருந்தார்கள். நான் பிரதிவாதியின் சொத்தையும் அளந்தேன். வழக்கு பட்டிகை சொத்தின் மேற்குப் பக்கம் பிரதிவாதியின் சொத்து உள்ளது என்றால், சரிதான். வழக்குப் பட்டிகை சொத்தின் வடக்குப் பக்கமும், கிழக்குப் பக்கமும் உள்ள சொத்துக்களை நான் அளக்கவில்லை என்றால், சரிதான். பிரதிவாதியின் சொத்தை நான் அளந்தேன் அதன் விஸ்தீரணம் 2 சென்ட் 636 சதுர லிங்க்ஸ். பிரதிவாதியின் சொத்தை 0.250 சென்ட் சொத்து பிரதிவாதி மற்றும் வாதியின் குடும்பங்களுக்கு பொதுவில் உள்ளது என்றாலும், அதை நான் எனது வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றாலும், சரிதான். அந்த இடத்தில் அவ்வாறு இடம் எதுவும் இல்லை. Building தான் இருந்தது. பிரதிவாதியின் சொத்திற்கும் வழக்கு பட்டிகை சொத்திற்கும் தெற்கில் பாதை உள்ளது என்றால், சரிதான். 0.250 சென்ட் என்பது அந்த பாதைக்கும் பிரதிவாதியின் வீட்டிற்கும் இடையே உள்ளது என்றால், சரியல்ல. பிரதிவாதியின் வீட்டிற்கும் அந்த பாதைக்கும் இடையே காலி மனை உள்ளது என்றால், சரிதான். அதனை எனது வரைபடத்தில் காட்டியிருக்கிறேன். பிரதிவாதியின் சொத்தை அளக்கும் போது பொது சொத்து 0.250 சென்ட் இருப்பதை பிரதிவாதியின் சொத்துடன் சேர்த்து அளந்திருக்கிறேன் என்றால், சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் கிழக்கு மற்றும் வடக்குப் பக்கத்தில் உள்ள சொத்துக்களை நான் அளக்காததால்

வழக்குப் பட்டிகை சொத்தின் சரியான அளவு புலப்படாது என்றால், சரியல்ல.

<u>வாதி தரப்பில் மறு விசாரணை</u>

வழக்குப் பட்டிகை சொத்தின் மேற்கு பக்கத்தில் வாதியின் சொத்தும் பிரதிவாதியின் சொத்தும் உள்ளது என்றால், சரிதான். வாதி மற்றும் பிரதிவாதியின் சொத்துக்கள் அனைத்திற்கும் எல்லை கற்கள் இருந்தன என்றால், சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.